ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

# பிம்புத் பினான்ஸ் பிஎல்சியின் வைப்பாளர்களுக்கான அறிவித்தல்

2011 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க நிதித் தொழிற் சட்டத்தின் 37வது பிரிவின் பிரகாரம், நிதித்தொழிலை மேற்கொள்வதற்கென பிம்புத் பினான்ஸ் பிஎல்சிக்கு (BFP) வழங்கப்பட்ட உரிமம் 01.09.2023 இல் இருந்து நடைமுறைக்குவரும் வகையில் இரத்து செய்யப்பட்டுள்ளது. இலங்கை மத்திய வங்கியானது 2021 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை உதவித் திட்ட **(SLDILSS)** ஒழுங்குவிதியின் ஏற்பாடுகளின் படி அனைத்து காப்பீடு செய்யப்பட்ட வைப்பாளர்களுக்கும் இழப்பீட்டைச் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கும்.

அனைத்து வைப்பாளர்களும் இழப்பீடு செலுத்துவதற்காக கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு முறையாக பூர்த்தி செய்யப்பட்ட உரிமைகோரல் படிவங்களை அறிவுறுத்தல்களில் கொடுக்கப்பட்டுள்ளபடி தேவையான ஆவணங்களுடன் சமர்ப்பிக்குமாறு இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள். கூட்டு வைப்பாளர்கள் தனித்தனியான உரிமைகோரல் படிவங்களைச் சமர்ப்பிக்குமாறு வேண்டப்படுகின்றார்கள். வைப்பாளர்களுக்கான இழப்பீட்டுக் கொடுப்பனவுகள், இலங்கை வங்கிகளுக்கிடையேயான கொடுப்பனவு முறைமை மூலம் குறிப்பிட்ட வங்கிக் கணக்குகளுக்கு நேரடியாக வரவு வைக்கப்படும். இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை உதவித் திட்ட ஒழுங்குவிதிகளின் படி, பிம்புத் பினான்ஸ் பிஎல்சியின் காப்பீடு செய்யப்பட்ட வைப்பாளர்கள் 01.09.2023 இலிருந்து ஆரம்பித்து இரண்டு (02) ஆண்டுகளுக்குப் பிந்தாமலோ அல்லது ஒடுக்குதல் தொடர்பாக தகுதிவாய்ந்த நீதிமன்றத்தால் ஒழிப்போன் நியமிக்கப்பட முன்னரோ அதாவது இதில் ஏதேனும் முன்னதாக நிகழும் நிகழ்வொன்றுக்கு முன் அவர்களுடைய உரிமைகோரல்களை சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

உரிமைகோரல் படிவம் இலங்கை மத்திய வங்கியின் இணையத்தளமான - www.cbsl.gov.lk இல் கிடைப்பதோடு அவற்றின் பிரதிகள் இலங்கை மத்திய வங்கியின் தலைமை அலுவலகத்திலும் அனுராதபுரம், கிளிநொச்சி மாத்தளை, மாத்தறை, நுவரெலியா மற்றும் திருகோணமலை ஆகிய இடங்களிலுள்ள பிராந்திய அலுவலகங்களிலும் கிடைக்கும். முறையாக பூர்த்தி செய்யப்பட்ட உரிமைக்கோரல் படிவங்கள் வேண்டப்பட்ட ஆவணங்களுடன் சேர்த்து இலங்கை மத்திய வங்கியின் அஞ்சல் அறைக்கு ஒப்படைக்கப்படவோ அல்லது கீழே கொடுக்கப்பட்டுள்ள முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் முடிந்தவரை விரைவாக அனுப்பப்படவோ வேண்டும். கடிதஉறையின் மேல் இடது பக்க மூலையில் "BFP" எனக் குறிப்பிடவும். ஏதேனும் மேலதிக விபரங்களை கீழே கொடுக்கப்பட்டுள்ள தொலைபேசி இலக்கங்கள் மூலம் இலங்கை மத்திய வங்கியின் தலைமை அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ள முடியும்.

பணிப்பாளர்

தீர்மானங்கள் மற்றும் நடைமுறைப்படுத்தல் திணைக்களம்

இலங்கை மத்திய வங்கி
இல. 30, சனாதிபதி மாவத்தை
கொழும்பு 01.

**மேலதிக விசாரணைகளுக்கு:**
0112 - 477261
0112 - 477276

**பிம்புத் பினான்ஸ் பிஎல்சி**
**பிரகடனத்துடனான உரிமைகோரல் படிவம்**
**இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை உதவித் திட்டம்**

உத்தியோகபூர்வ அடையாள இல:
(அலுவலகப் பயன்பாட்டுக்கு மட்டும்)

ஒவ்வொரு வைப்பாளரும் கூட்டுக் கணக்குகளின் விபரங்கள் உள்ளடங்கலான உரிமைகோரல் படிவங்களைச் சமர்ப்பிக்க வேண்டும். அத்தகைய கூட்டுக் கணக்கு வைத்திருப்பவர்கள் தனித்தனியான உரிமைகோரல் படிவங்களைச் சமர்ப்பிக்க வேண்டும். இந்தப் படிவத்தைப் பூர்த்தி செய்ய தயவுசெய்து கீழே தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைப் பார்க்கவும். **(அனைத்து வெற்றிடங்களையும் பூர்த்தி செய்வது கட்டாயமாகும்)**

1. வைப்பாளரின் விபரங்கள்:

1.1 முழுப் பெயர்:..........................................................................................................................

1.2 அடையாள இலக்கங்கள்: (தயவுசெய்து, கீழே இலக்கம் (I),(II) மற்றும் (III) இல் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களை வாசிக்கவும்) (அடையாள ஆவணங்களின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகள் இணைக்கப்படல் வேண்டும்.)

அ. தேசிய அடையாள அட்டை இல./ வியாபாரப் பதிவு இல:......................ஆ. கடவுச் சீட்டு இல.:......................இ. ஓட்டுநர் உரிம இல. :............................

1.3 தற்போதைய முகவரி:..........................................................................................................................

1.4 தொலை பேசி இலக்கங்கள்: நிலையான...................................... செல்லிட...................................... 1.5 மின் அஞ்சல் முகவரி:..............................................

2. இழப்பீட்டுக் கொடுப்பனவைச் செலுத்துவதற்கான வைப்பாளரின் வங்கிக்கணக்கு விபரங்கள்:- (தயவுசெய்து, கீழே இலக்கம் (**IV**) இல் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களை வாசிக்கவும்):

1.1 கணக்கு வைத்திருப்பவரின் பெயர்:......................................1.2 வங்கியின் பெயர்:...................................... 2.3 வங்கிக் கணக்கு இல:......................................

(2.3ல் குறிப்பிட்ட சேமிப்புப் புத்தகத்தின் முதல் பக்கத்தின் பிரதி அல்லது வங்கிக் கூற்றின் பிரதி ஒன்று இணைக்கப்பட வேண்டும்.)

1.3 கணக்கு வைத்திருக்கும் கிளையின் பெயர்:..........................................................................................

3. 01.09.2023 இல் உள்ளவாறான வைப்பு விபரங்கள் (ஒவ்வொரு வைப்புக்கும் தனித்தனியாக விபரங்கள் வழங்கப்பட வேண்டும், அத்தோடு மேலதிகமான விபரங்களுக்கு பிறிதொரு தாளைப் பயன்படுத்தவும்) (தயவுசெய்து, கீழே இலக்கம் (V) மற்றும் (VI) இல் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களை வாசிக்கவும்):

| கணக்கு இல./வைப்புச் சான்றிதழ் இல./ சேமிப்புப் புத்தக இல.* | தொடர் இல. | வைப்பின் வகை சேமிப்பு/ நிலையான வைப்பு (தனி/கூட்டு) | வைப்புத் தொகை (ரூ.) |
|---|---|---|---|
| | | | |
| | | | |

*** அனைத்து மூல வைப்புச் சான்றிதழ்கள், சேமிப்புப் புத்தகங்கள் மற்றும் இறுதியான புதுப்பித்தற் கடிதங்கள் ஏதேனும் இருந்தால் வழங்கவும்.**

4. பிரகடனம் (தயவுசெய்து, கீழே இலக்கம் (VII) இல் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களை வாசிக்கவும்):

.................................................................................... (உரிமை கோருபவரின் முகவரி) ஐச் சேர்ந்த ............................................................ (உரிமை கோருபவரின்/ சட்டபூர்வ பயனாளியின் பெயர்) ஆகிய நான், இவ்வுரிமைகோரலானது, ...................................................................... (வைப்பாளரின் பெயர்) சார்பில் செய்யப்படுகின்றது என்றும், சொல்லப்பட்ட வைப்பின் எந்தவொரு பகுதியும் கொடுப்பனவு செய்யப்படவில்லை என்றும், மேலே எடுத்துரைக்கப்பட்டவாறு சொல்லப்பட்ட நிறுவனத்துடன் அதில் அல்லது அதன் ஏதேனும் பாகத்தின் புறக்குறிப்பீடோ அல்லது சாட்டுதலோ செய்யப்படவில்லை என்றும் கூறுகின்றேன்.

நான், வைப்பு/ வைப்புக்கள் மீது இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை உதவித் திட்டதினால் மேற்கொள்ளப்படும் இழப்பீட்டுக் கொடுப்பனவின் பெறுகையின் மீது மூன்றாந்தரப்பினால் கோரப்படும் அல்லது உரிமைகோரப்படும் பொறுப்புக்கள், வட்டி, இழப்புக்கள், செலவுகள், கட்டணங்கள் என்பன உள்ளடங்கலாக, ஆயினும் இதற்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்படாத ஏதேனும் அல்லது அனைத்து உரிமைகோரல்களில் இருந்து/ எதிராக இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை உதவித்திட்டம், இலங்கை மத்திய வங்கியின் ஆளும் சபை மற்றும் அதன் எவரேனும் ஊழியர்கள், அலுவலர்கள், பிரதிநிதிகள் மற்றும் முகவர்களுக்கு இழப்பீட்டினை அளிப்பதற்கும் தீங்கின்றி இருப்பதற்கும் இத்தால் இணங்குகின்றேன்.

**உரிமை கோருபவரின் கையொப்பம்:**...............................................................

உரிமை கோருபவர் இதன் உள்ளடக்கங்களை வாசித்துப் புரிந்துகொண்டு................ இல்.............திகதி...............மாதம்...................ஆண்டு என் முன்னால் பிரகடனப்படுத்திக் கையொப்பமிட்டார்.

**கையொப்பம்:**...............................................................
சத்தியப்பிரமாண ஆணையாளர்/ சமாதான நீதவான்
உத்தியோகபூர்வ முத்திரை:......................... முகவரி:...................................... திகதி:.............................................

## உரிமைகோரல் படிவத்தைப் பூரணப்படுத்துவதற்கான பொதுவான அறிவுறுத்தல்கள்

இந்த உரிமைகோரல் படிவமானது 01.09.2023 அன்று நிதித் தொழில் உரிமம் இரத்து செய்யப்பட முன்னதாக பிம்புத் பினான்ஸ் பிஎல்சியால் இதுவரையில் மீளச் செலுத்தப்பட்டிராத வைப்பாளர்களுக்கு மட்டுமே ஏற்புடையதாகும்.

I. பின்வருவனவற்றைக் கருத்தில் கொண்டு தொடர்புடைய அனைத்து அடையாள விபரங்களும் பூரணப்படுத்தப்படல் வேண்டும்:
   அ) தனிப்பட்ட கணக்குகள்- தேசிய அடையாள அட்டை/ கடவுச்சீட்டு/ ஓட்டுநர் உரிமம்.
   ஆ) பராயமடையாதோர் கணக்குகள் - பாதுகாவலரின் அடையாள அட்டை/ கடவுச்சீட்டு/ ஓட்டுநர் உரிமம் மற்றும் பராயமடையாதவரின் பிறப்புச் சான்றிதழ்.
   இ) தனியுடமை, பதிவுசெய்யப்படாத கழகம், சங்கம், பங்குடமை அல்லது வேறு ஏதேனும் கூட்டிணைக்கப்படாத நிறுவனம்- அதிகாரமளிக்கப்பட்ட கையொப்பதாரர்களின் அல்லது பங்காளர்களின் தேசிய அடையாள அட்டை/ கடவுச்சீட்டு/ ஓட்டுநர் உரிமத்தின் இலக்கம்.
   ஈ) கம்பனிச் சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட கம்பனியொன்றாக இருக்குமிடத்து கூட்டிணைப்புச் சான்றிதழ், படிவம் 20 (அதாவது பணிப்பாளர்/செயலாளர் மாற்றம் அல்லது பணிப்பாளர்/ செயலாளரின் விபரங்கள்) மற்றும் கம்பனியின் நிலையில் ஏற்படும் மாற்றங்களின் அடிப்படையில் தேவைப்படுத்தக்கூடிய ஏனைய ஆவணங்கள் என்பன வழங்கப்படல் வேண்டும்.
   உ) ஏனைய பதிவுசெய்யப்பட்ட நிறுவனங்கள்- பிரதேச/உள்ளூராட்சி மன்றங்களின் கீழ் பதிவுசெய்யப்பட்ட நிறுவனங்களாக இருக்குமிடத்து தொடர்பான அதிகாரசபையிடமிருந்தான பதிவுசெய்தல் சான்றிதழ்கள் வழங்கப்படல் வேண்டும்.

II. பிம்புத் பினானஸ் பிஎல்சியில் வைப்புகளைத் திறப்பதற்கு பயன்படுத்தப்பட்ட தொடர்புடைய அனைத்து அடையாள ஆவணங்களினதும் உறுதி செய்யப்பட்ட பிரதிகள் வழங்கப்பட வேண்டும். (சட்டத்தரணி/ பிரசித்த நொத்தாரிசு/ சத்தியப்பிரமாண ஆணையாளர்/ சமாதான நீதவான் ஒருவரால் அடையாள ஆவணங்களின் பிரதிகள் சான்றுப்படுத்தப்படல் வேண்டும்).

III. பிம்புத் பினானஸ் பிஎல்சியில் வைப்புச்சான்றிதழ்/ புத்தகம் மற்றும் கணக்கைத் திறப்பதற்குப் பயன்படுத்தப்பட்ட அடையாள ஆவணங்களிடையே (தேசிய அடையாள அட்டை/ கடவுச்சீட்டு/ ஓட்டுநர் உரிமம்) வைப்பாளரின் பெயரில் அல்லது அடையாள இலக்கத்தில் வேறுபாடுகள் இருப்பின் அத்தகைய வேறுபாடுகளுக்கான காரணங்களைக் குறிப்பிட்டு சத்தியப்பிரமாண ஆணையாளர்/ சமாதான நீதவானால் சான்றுப்படுத்தப்பட்ட சட்டரிதியான செல்லுபடியாகத்தக்க சத்தியக்கடதாசியொன்று சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

IV. வைப்பாளர்களது வங்கிக் கணக்கு விபரங்கள் பின்வருவனவற்றால் துணைசெய்யப்படல் வேண்டும்:
   அ) சேமிப்புக் கணக்கு- கணக்கு வைத்திருப்பவரின் விபரங்களை உள்ளடக்கிய சேமிப்புப் புத்தகத்தின் முதல் பக்கத்தின் பிரதியொன்று.
   ஆ) நடைமுறைக் கணக்கு- கணக்கின் இறுதிக் கூற்று.

V. நிலையான வைப்பொன்றைப் பொறுத்தவரையில் "வைப்புத் தொகை" என்பது இறுதியாகப் புதுப்பிக்கப்பட்ட வைப்புப் பெறுமதியாக/ இல்லாவிட்டால் நிலையான வைப்புச் சான்றிதழின் முகப் பெறுமதியாக இருத்தல் வேண்டும்.

VI. உரிமைகோரப்படும் தொகை ஆவணச் சான்றுகளால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும். எனவே, சமர்ப்பிக்கப்படும் உரிமைகோரல் படிவங்கள் பின்வருவனவற்றால் துணைசெய்யப்படல் வேண்டும்:
   அ) நிலையான வைப்புக்கள்- அனைத்து நிலையான வைப்புச் சான்றிதழ்களின் மூலப்பிரதிகள், இறுதியான புதுப்பித்தல் கடிதங்கள்.
   ஆ) சேமிப்புக் கணக்குகள்- அனைத்து சேமிப்பு மூலப் புத்தகங்கள்.
   இ) வைப்புச்சான்றிதழ் ஏதேனும் - வைப்புக்களின் அனைத்து மூல சான்றிதழ்கள்.

VII. வைப்பாளர் தன்னுடைய சொந்த உரிமைகோரல் படிவத்தைச் சமர்ப்பிப்பதாயின் (கூட்டுக்கணக்கு வைப்பாளர் உட்பட) உரிமைகோரல் படிவத்தின் பிரகடனப்பகுதியில் உரிய வைப்பாளர் "வைப்பாளர், உரிமை கோருபவர்/ சட்டபூர்வப் பயனாளி" என்ற இரண்டின் கீழும் தனது பெயரைக் குறிப்பிடுதல் வேண்டும்.

**விசேட குறிப்பு:** தரப்பட்ட அறிவுறுத்தல்களின் படி முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்துடன் வேண்டப்பட்ட அனைத்து ஆவணங்களையும் சமர்ப்பித்த வைப்பாளர்கள்/சட்டபூர்வப் பயனாளிகளுக்கு மட்டுமே கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தயவுகூர்ந்து கவனிக்கவும்.